**கவனிக்க.-** *2010.10.15 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1677 - 2010 ඔක්තෝබර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.10.21
*1677 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) – பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | – |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | – |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | – |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | – |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | – |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | – |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | – |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1826 |
| விலைக் கட்டளைகள் | – |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | – |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | – |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1833 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | – |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | – |

**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் 2010 ஆம் ஆண்டிற்கான பலப்பிட்டி நீதிமன்ற வலயத்தின் யூரிமார் மற்றும் விசேட யூரிமார் (சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் மட்டும் கடமையாற்றும்) பட்டியலொன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை – நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி–வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 89/48* III

## தபால், தந்தி நலன்புரிக் கழகம்

*(286 ஆம் அத்தியாயமான)* தபால், தந்தி நலன்புரிக் கழகக் கட்டளைச் சட்டத்தின் II ஆம் பிரிவின் கீழ் தபால், தந்தி நலன்புரிக் கழகத்தால் ஆக்கப்பட்டு அப்பிரிவால் நிதி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் பயனைக் கொண்டு அவரால் உறுதிப்படுத்தப்பட்ட விதிகள்.

அசோக்க ஜயசேக்கர,
செயலாளர்,
தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சு.

கொழும்பு,
*2010.09.28.*

**விதி**

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான *1949*, சனவரி *07* ஆந் திகதிய *9936* ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தபால், தந்தி நலன்புரிக் கழகத்தின் விதிகள் பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன.

*1.* **அத்தியாயம் I - பொது விதிகள்**

(i) விதி *11* (i) (ஆ) என்பதில் — ''ரூபாய் *10,000*'' என்னும் சொல்லையும் இலக்கத்தையும் நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக ''ரூபாய் *20,000*'' என்னும் சொல்லையும் இலக்கத்தையும் இடவும்.

(ii) விதி *19 (3) (1)* என்பதில் — (அ), (ஆ), (இ), (ஈ) அத்துடன் (உ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடவும் :

(அ) இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆனால் ஐந்து ஆண்டுகளுக்குக் குறைவாக கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராக இருந்துள்ள ஆளொருவருக்கு ரூபா *5,000* செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஆனால் பதினைந்து ஆண்டுகளுக்குக் குறைவாக கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராக இருந்துள்ள ஆளொருவருக்கு ரூபா *15,000* செலுத்தப்படுதல் வேண்டும்.

(இ) பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராக இருந்துள்ள ஆளொருவருக்கு ரூபா *25,000* செலுத்தப்படுதல் வேண்டும்.

(iii) விதி *20* இல் — பந்தி *3* என்பதனை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடவும் :

''*(3)* (அ) ஏதேனும் கடனின் மீள்கொடுப்பனவு கடன் வழங்கப்பட்ட மாதத்தை உடனடுத்து வரும் மாதத்திலிருந்து தொடங்குதல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட ஏதேனும் கடனுக்கு உறுப்பினரிடமிருந்து ரூபா *20* சேவைக் கட்டணமொன்று அறவிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சேவைக்கட்டணம் கடனின் முதலாவது தவணைக் கொடுப்பனவு மீளச் செலுத்தப்படும்பொழுது சேகரிக்கப்படுதலும் வேண்டும்.''

*2.* **அத்தியாயம் II -கூட்டுத்தாபனத்தின் நிதியங்களை வீட்டாதனக் கடன்களில் முதலீடு செய்தல்**

விதி *10* என்பதனை நீக்கஞ் செய்து பின்வருவதனை இடவும்.

''வட்டி வீதமும் எப்போது செலுத்தப்படற்பாலது என்பதும்.

*10* (i) அத்தகைய கடன்கள் மீதான வட்டி கடன் வழங்கப்பட்ட மாதத்தை உடனடுத்து வரும் மாதத்தில் தொடங்கி மாதாந்தம் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(ii) ஒவ்வொரு மாதத்தின் முடிவிலும் நிலுவையிலுள்ள தொகையின் மீது ஒவ்வொரு நூறு ரூபாவுக்கும் அல்லது அதன் பாகத்திற்கும் ரூபா *1* வட்டியொன்று உறுப்பினரிடமிருந்து (குறையும் மீதியின் அடிப்படையில்) அறவிடப்படுதல் வேண்டும்.''.

*3.* **அத்தியாயம் III -இளைப்பாறும் நலன்புரித் திட்டம்**

விதி *2* என்பதனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடவும்.

''*2.* கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் மாதமொன்றுக்குக் குறைந்த பட்சம் ரூபா *100* ஐ கூட்டுத்தாபனத்திற்கு உதவுத் தொகையாகச் செலுத்துதல் வேண்டும். உறுப்பினர் அவரது உதவு தொகையை அதிகரிக்க விரும்பினால் அவர் அவ்வாறு செய்யலாம். ஆனால் தொகையானது ரூபா *100* மடங்கு தொகைகளில் இருத்தல் வேண்டும்.

*4.* **அத்தியாயம் VI-உறுப்பினர்களின் தங்கிவாழுநர்களுக்கு மரண நன்கொடைத் திட்டம்**

(i) விதி III இல் ''ரூபா ஆறு (ரூபா *6*)'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ரூபாய் முப்பது (ரூபா *30*)'' என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

(ii) விதி IV என்பதனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடவும் :

''(iv) மரண நன்கொடைத் திட்டத்தின் கீழ் பின்வரும் நன்கொடைகள் செலுத்தப்படுதல் வேண்டும் :

பின்வருபவர்களின் இறப்பிற்கு :

(அ) உறுப்பினர் ஒருவரின் வாழ்க்கைத் துணை (கணவன் அல்லது மனைவி) - ரூபா *10,000*

(ஆ) உறுப்பினர் ஒருவரின் திருமணமாகாத மகன் அல்லது திருமணமாகாத மகள் - ரூபா 5,000

(இ) உறுப்பினர் ஒருவரின் தந்தை அல்லது தாய் - ரூபா 3,000''

5. **அத்தியாயம் VII - விசேட பொருட்களின் கொள்வனவுக்கான கடன்**

(i) விதி (1) என்பதில் "ரூபா 20,000" என்னும் சொல்லையும் இலக்கத்தையும் நீக்கஞ் செய்து அவற்றிற்குப் பதிலாக "ரூபா 50,000" என்னும் சொல்லையும் இலக்கத்தையும் இடவும் :

(ii) விதி 4 என்பதில் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடவும் :

"(உ) கடன் 50 மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளில் அறவிடப்படுதல் வேண்டும். ஒவ்வொரு மாதத்தின் முடிவிலும் நிலுவையிலிருக்கும் மீதியின் மீதான ஒவ்வொரு நூறு ரூபாவுக்கும் அல்லது அதன் பாகமொன்றுக்கு ஒரு ரூபா மாதவட்டியொன்று உறுப்பினரிடமிருந்து (குறைந்துவரும் மீதியின் அடிப்படையில்) அறவிடப்படுதல் வேண்டும்."

6. அத்தியாயம் XI என்பதனை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடவும் :-

"**அத்தியாயம்** XI

**நலன்புரி நிதியம்**

(1) (அ) அஞ்சல், தந்தி நலன்புரிக் கழகத்தின் நலம்பேணல் நிதியம் என அறியப்படவேண்டிய நலம்பேணல் நிதிய மொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் நலம்பேணல் நிதியம் எனக் குறிப்பீடு செய்யப் படும்).

(ஆ) நலம்பேணல் நிதியத்தின் குறிக்கோள்கள் பின்வருவன வாதல் வேண்டும் :-

(i) உறுப்பினர்களின் பிள்ளைகளாகிய, ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடை பவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கல் ;

(ii) உறுப்பினர்களின் பிள்ளைகளாகிய, க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சித்தியடைபவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கல் ;

(iii) புற்றுநோய், சிறுநீரக அல்லது இருதய உபாதைகளால் பீடிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு நிதியுதவி வழங் குதல்.

(இ) கூட்டுத்தாபனத்தின் உதவுதொகையைச் செலுத்தியுள்ள உறுப்பினர்கள் அந்நிகழ்வால் நலம்பேணல் நிதியத்தின் உறுப்பினரொருவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) உறுப்பினர் ஒவ்வொருவரும் நலம்பேணல் நிதியத்தின் உறுப்பாண்மைக் கட்டணமாக மாதமொன்றுக்கு ரூபா 10 செலுத்துதல் வேண்டும் ;

(உ) பந்தி (ஆ) என்பதன் கீழ் வழங்கப்படவுள்ள நிதியுதவியின் தொகையும் பந்தி (ஈ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பாண்மைக் கட்டணமும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானமொன்றின் மூலம் கூட்டுத்தாபனத்தால் மீளாய்வு செய்யப்படலாம்.

(ஊ) இவ்வத்தியாயத்தில் எந்தப் பிணக்கிற்கு அல்லது வினாவுக்கு ஏற்பாடு செய்யப்படவில்லையோ அந்த ஏதேனும் பிணக்கு அல்லது வினா தொடர்பில் முகாமைத் துவக் குழுவின் முடிவே இறுதியானதும் முடிபானதாத லும் வேண்டும்.

(2) **ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் திட்டம்**

(அ) ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் பெறப்பட்ட ஆகக்கூடுதலான புள்ளிகளின் அடிப்படையில் இருபது மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) பெறப்பட்ட புள்ளிகளின் சமநிலை காரணமாக பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட எண்ணிக்கை இருபதை விஞ்சுமிடத்து சமமான புள்ளிகள் பெற்றவர்களிடையே திருவுளச் சீட்டுக்கள் இழுப்பதன் மூலம் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

(இ) இவ்வத்தியாயத்தின் பந்தி (1) (இ) என்பதன் ஏற்பாடுகளுக்கமைய புலமைப்பரிசிலொன்றை வெல்லும் ஒவ்வொருவருக்கும் ஒரே தடவையிலான கொடுப்பனவான ரூபா 5000.00 வழங்கப்படுதல் வேண்டும்.

(3) **க. பொ. த. (உ.த.) புலமைப்பரிசில் திட்டம்**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்லைக்கழகங்களின் முதலாம் ஆண்டு மாணவர்களிடையேயிருந்து முறையே கணிதப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு அத்துடன் கலைப்பிரிவு ஒவ்வொன்றிலுமிருந்து இரண்டு என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பத்து பட்டதாரி மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

(ஆ) வெற்றி பெறுபவர்கள் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் பெறப்பட்ட ஆகக்கூடுதலான புள்ளிகளின் அடிப்படை யில் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

(இ) இவ்வத்தியாயத்தின் பந்தி (1)(உ) என்பதன் ஏற்பாடுகளுக் கமைய புலமைப்பரிசிலொன்றை வெல்லும் ஒவ்வொரு வருக்கும் ஒரே தடவையிலான கொடுப்பனவாக ரூபா 10,000.00 செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) **புற்றுநோய், சிறுநீரக அல்லது இருதய உபாதைகளுக்கு சத்திரசிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு நிதியுதவி**

(அ) இவ்வத்தியாயத்தின் பந்தி (1) (உ) என்பதன் ஏற்பாடுகளுக்கமைய புற்றுநோய், சிறுநீரக அல்லது இருதய உபாதை காரணமாக சத்திரசிகிச்சை செய்து கொண்ட உறுப்பினர் ஒருவருக்கு ஒரே தடவையிலான கொடுப்பன வாக ரூபா 25,000.00 செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) இது தொடர்பில் உறுப்பினர் கூட்டுத்தாபனத்தால் தேவைப்படுத்தக்கூடியவாறான மருத்துவச் சான்றிதழ் களையும் வேறு ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண் டும்:

(இ) இப்பந்தியின் கீழ் நிதியுதவி -

(i) சத்திரசிகிச்சை பூர்த்தியடைந்ததும் ;
(ii) உறுப்பினர் ஒருவருக்கு அவரது ஆயுள் காலத்தில் ஒரு தடவை மாத்திரமே;
(iii) எந்த சத்திரசிகிச்சைகளுக்கான செலவு 4,00,000 ரூபாவை விஞ்சுகின்றதோ அந்த சத்திரசிகிச்சைகளுக்கு மாத்திரம் ; அத்துடன்

(iv) ஓராண்டிற்குள் ஐந்து உறுப்பினர்களுக்கு மாத்திரமே.

செலுத்தப்படுதல் வேண்டும்.”

10-651

---

ச. வ. - பீ. 277/40

## (188 ஆம் அத்தியாயமான) புராதன பொருட்கள் கட்டளைச் சட்டம்

18 ஆம் பிரிவின் கீழான அறிவிப்பு

(188 ஆம் அத்தியாயமான) புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார அலுவலகள் அமைச்சர் பவித்திரா வன்னிஆரச்சி ஆகிய நான் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்கு இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நினைவுச்சின்னங்களை “பாதுகாக்கப்பட்ட நினைவு சின்னங்களாக” இக்கட்டளையின் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நினைவுச்சின்னங்கள் தொடர்பில் 19 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் 2010, மே மாதம் 26 ஆந் திகதிய 1656 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

சட்டத்தரணி பவித்திரா வன்னிஆரச்சி,
தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார,
அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2010.09.13

### அட்டவணை

பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்களாக வெளிப்படுத்தப்படும் நினைவுச்சின்னங்களின் நிரல்

1. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவின் இல. 381, குருநாகல் நகரம் வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்தள்ள ஸ்ரீ ஸைலதலாராம விகாரை பூமிக்கு சொந்தமான நீர் வடிகள் வெட்டப்பட்ட கற்குகை.

2. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவின் இல. 711, ஹந்தமாகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் பிசோகல என்ற இடத்தில் காணப்படுகின்ற நீர் வடிகள் வெட்டப்பட்ட கற்குகை.

3. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவின் மல்லவபிடிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள பஹல கட்டுவான கிராமத்திற்குச் சொந்தமான மஹதுரயாகே கல்லறை.

4. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவின் இல. 822, வில்பாவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள வில்பாவ ரஜ மகா விகாரை பூமியிலுள்ள பிராமி எழுத்துக்களைக் கொண்ட கல் வெட்டைக் கொண்டுள்ள நீர் வடிகள் வெட்டப்பட்ட கற்குகை.

5. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவின் இல. 771 கிணிகராவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கிணிகராவ ரஜ மகா விகாரை பூமிக்குச் சொந்தமான நீர் வடிகள் வெட்டப்பட்ட குகை விகாரை.

6. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவின் இல. 771, ஹந்தாகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஹந்தாகம விகாரை பூமிக்குச் சொந்தமான நீர் வடிகள் வெட்டப்பட்ட கற்குகைகள்.

7. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவின் இல. 440 அரங்கெலே கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள பன்னக்கம பணமடுவ என்ற இடத்திலான புராதன சிதைந்த கட்டிடத்தொகுதி.

8. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவின் இல. 464 மாலகமுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள உதுபடகம ரஜ மகா விகாரை பூமிக்குச் சொந்தமான டெம்பிற்ற விகாரை.

9. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில், பொல்கஹவெலை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 329 திவுல்லாகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கனேவெவ புராண ரஜ மகா விகாரை பூமிக்குச் சொந்தமான புத்தர் திருவுருவத்தலம்.

10. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில், நிக்கவரட்டி பிரதேச செயலாளர் பிரிவின் ஆரகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கலதெனிகட புராண ரஜ மகா விகாரை பூமிக்குச் சொந்தமான நீர் வடிகள் வெட்டப்பட்ட கற்குகையும் புராதன ஓவியச் சிற்பங்களைக் கொண்டுள்ள சிறிய குகை விகாரை.

11. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில், பொல்கஹவெலை பிரதேச செயலாளர் பிரிவின் கடலித்தாவல கிராம உத்தியோகத்தர் பிரிவில் கொண்டுவேகெதர பத்தினிகோயில் பூமிக்குச் சொந்தமான புராதன டெம்பிற்ற கோயிலறை.

12. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில், நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவின் தம்பதெனிய தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் நாகஹமுல ஆலய பூமிக்குச் சொந்தமான சிதைவுகளைக் கொண்டுள்ள கற்றூண்கள்.

13. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவின் இல. 840 குருநாகல் வடகிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள குருநாகல் மாநகர சபை எல்லையிலுள்ள ஜேதவன பிரிவெனா பூமியில் அமைந்துள்ள நீர் வடிகள் வெட்டப்பட்ட இரு கற்குகைகள்.

**காலி மாவட்டம்**

14. தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தில், பத்தேகம பிரதேச செயலாளர் பிரிவின் இல. 204, தெலிகட கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள தெலிகட ஸ்ரீ சுனந்தாரா புராதன விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன ஓவியங்களும் சிலைகள் கொண்டுள்ள உருவத்தலமும்.

15. தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தில், தவலம பிரதேச செயலாளர் பிரிவின் பனங்கல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள பனங்கல கங்காராம விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன ஓவியங்களும் சிலைகள் கொண்டுள்ள உருவத்தலமும்.

16. தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தில், வலிவிடிய திவிதுர பிரதேச செயலாளர் பிரிவின் இல. 196 - ஏ வாடுவலிவிடிய பனங்கல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள வாடுவலிவிடிய கங்காராம விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன ஓவியங்களும் சிலைகள் கொண்டுள்ள உருவத்தலம் மற்றும் சைத்தியம்.

17. தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தில், பத்தேகம பிரதேச செயலாளர் பிரிவின் இல. 204, தெலிகட கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள அங்பிட்டிய கோயில் பூமிக்குச் சொந்தமான புராதன கற்றூண்கள்.

18. தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தில், நாகொட பிரதேச செயலாளர் பிரிவின் இல.216 நாகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள ஜயசிங்காராம புராண விகாரை பூமிக்குச் சொந்தமான புராண போதனை மண்டபம்.

19. தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தில், எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் இல. 31, அமுகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள இகலகொட சிரிவிஜயாராம விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன ஓவியங்கள் கொண்டமைந்த உருவத்தலம்.

**மாத்தறை மாவட்டம்**

20. தென் மாகாணத்தில் மாத்தறை மாவட்டத்தில், கொடபொல பிரதேச செயலாளர் பிரிவின் இல. 240ஏ, கொளவெனிகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கொளவெனிககம ரஜ மகா விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன உருவத்தலம்.

**மாத்தளை மாவட்டம்**

21. மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவின் தொம்பவெல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள பலாபத்வெல பல்லெகனே பொத்குல் விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன உருவலத்தலம் மற்றும் புத்த பிக்குகள் தங்கும் இல்லம்.

22. மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில் உகுவெல பிரதேச செயலாளர் பிரிவின் மகாஹதன்ன தம்பாவெல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள ரெட்பானா வரகவெல குரூப் தோட்ட பங்களா.

**கண்டி மாவட்டம்**

23. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் கங்கவட கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் கண்டி கிராம உத்தியோகத்தர் பிரிவில் கண்டி நகரத்தில் அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆலய பூமிக்குச் சொந்தமான கூட்டறை.

24. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் கங்கவட கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் இல. 357 கண்டி கிராம உத்தியோகத்தர் பிரிவில் கண்டி நகர தேவ வீதியில் அமைந்துள்ள விதானையார் அரண்மனை.

25. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் கங்கவட கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் இல. 257, பூவலிகட கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள பூவெலிகட புராதன நீதிமன்ற கட்டிடம் மற்றும் அதன் வடதிசையில் அமைந்துள்ள புராதன நான்கு (04) கட்டிடங்கள்.

26. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் கங்கவட கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் தல்வத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள தல்வத்த கங்காராம விகாரை பூமிக்குச் சொந்தமான திருவுருவத்தலம்.

27. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் கங்கவட கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் சுதுஹும்பொல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள சுதுஹும்பொல ரஜ மகா விகாரை பூமிக்குச் சொந்தமான திருவுருவத்தலம்.

28. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் கங்கவட கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் வட்டாரதன்ன கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள வட்டாரதன்ன புராதன கற்குகை விகாரை பூமிக்குச் சொந்தமான நீர்வடிகள் வெட்டப்பட்ட கற்குகை மற்றும் உருவத்தலம்.

29. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் கங்கவட கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் இல. 254, மல்வத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் கண்டி நகரத்தில் அமைந்துள்ள மல்வத்த போயமலு விகாரை பூமிக்குச் சொந்தமான திருவுருவத்தலம் உட்பட போயகில்லம்.

30. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் கங்கவட கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் இல. 254, மல்வத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் கண்டி நகரத்தில் அமைந்துள்ள நாகவிமான கந்தே விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன உருவத்தலம்.

31. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், உடுநுவர பிரதேச செயலாளர் பிரிவின் உருலாவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள உருலாவத்த புராண விகாரை பூமிக்கும் சத்பத்தினி கோயில் பூமிக்கும் சொந்தமான சைத்தியங்கள் உட்பட்டுள்ள நீர்வடிகள் வெட்டப்பட்ட குகை விகாரை மற்றும் கற்படிக்கட்டு.

32. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், ஹதரலியத்த பிரதேச செயலாளர் பிரிவில் தங்கும்புர கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள தங்கும்புர புராண விகாரை பூமிக்குச் சொந்தமான டெம்பிற்ற திருவுருவத்தலம் மற்றும் புத்த பிக்குகள் தங்கும் இல்லம்.

33. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், பாததும்புர பிரதேச செயலாளர் பிரிவின் இல. 615 உடதலவின்ன கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள வெஹெரகம புராதன சைத்தியம்.

**நுவரெலியா மாவட்டம்**

34. மத்திய மாகாணத்தில், நுவரெலியா மாவட்டத்தில், ஹங்குராங்கெத்தை பிரதேச செயலாளர் பிரிவின் உடமலுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள ஹங்குராங்கெத்தை பொத்குல் மாளிகா விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன சான்றுகள்கொண்டுள்ள புத்த பிக்குகள் தங்கும் இல்லம்.

**களுத்துறை மாவட்டம்**

35. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில், பாத்ததும்பர பிரதேச செயலாளர் பிரிவின் இல. 620, ஹொரேதுடுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள ஹொரேதுடுவ கங்காராம விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன போதனை மண்டபம்.

**கேகாலை மாவட்டம்**

36. சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில், அரனாயக்க பிரதேச செயலாளர் பிரிவின், அச்மடல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள அச்மடல பொதுரல்ல ஹேணவத்த என்ற காணியிலுள்ள கல்வெட்டை கொண்ட நீர்வடி வெட்டப்பட்ட குகை.

37. சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில், அரனாயக்க பிரதேச செயலாளர் பிரிவின், அச்மடல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள அச்மடல கல்கொட ஹேனவத்த என்ற காணியிலுள்ள வரலாற்றுக்கு முற்பட்ட சான்றுகளுள்ள குகை மற்றும் நீர்வடி வெட்டப்பட்ட குகை.

38. சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில், அரனாயக்க பிரதேச செயலாளர் பிரிவின், அச்மடல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள அச்மடல லுணுமிதிஅல்ல பாதுகாக்கப்பட்டுள்ள பகுதி என்ற இடத்திலுள்ள நீர்வடி வெட்டப்பட்ட குகை.

39. சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில், அரனாயக்க பிரதேச செயலாளர் பிரிவின், அச்மடல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள இஹல கடே அச்மடல என்ற இடத்திலுள்ள நீர்வடி வெட்டப்பட்ட குகை.

40. சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில், கேகாலை பிரதேச செயலாளர் பிரிவின், அதுருபான கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள தெகலதிரிய கலஉடதன்ன விகாரை பூமிக்குச் சொந்தமான நீர்வடி வெட்டப்பட்ட குகை.

10-749

---

## காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் 2 ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 1 ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 3 ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்கள்) கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2010.10.22 ஆந் திகதி தொடக்கம் 2010.11.05 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு நுகேகொடை காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான ஏதேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2010.11.12 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல. : பீஎன் /11/02/16/2010/பிடு/ஸ.
பதிவாளர் நாயகம் காரியாலயம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் பழுதடைந்த ஏடுகளின் விபரங்கள் | காணியின் விபரங்கள் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள் |
|---|---|---|
| கொழும்பு மாவட்டத்தின் நுகேகொடை காணிப் பதிவகத்தில் "தெஹிவலை" எனும் பிரிவில் 55 ஆம் காண டத்தில் 119-120 ஆம் இலக்க ஏடு | மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தின் சல்பிட்டி கோறளை யின் பல்லேபற்றுவ தெஹிவலை-கல்கிசை மாநகர சபை எல்லைக்குள் ஸ்டேசன் வீதி (தற்பொழுது மேஜர் எல். வீ. குணரத்ன மாவத்தை) 0ஏ. 0றூ. 10.20பே. விசாலமுடைய எபொத்தரியாவத்தை என்னும் பெயருடைய இடத்தின் டபிள்யூ. அகங்கம நிலஅளவீட்டாளரினால் 1980/23 ஆந் திகதிய 2384 ஆம் இலக்க அளவீட்டின் பிரகாரம் 56B8 காணித்துண்டின் எல்லைகள் :-<br><br>வடக்கே : லொட் 56B8 ;<br>கிழக்கே : லொட் 56B7;<br>தெற்கே : லொட் K7A ;<br>மேற்கே : லொட் 56B9. | 1. வீ. ஈ. செல்வராஜா பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 1981.01.08 ஆந் திகதிய 64 ஆம் இலக்க அறுதி உறுதி. |
| கொழும்பு மாவட்டத்தின் நுகேகொடை காணிப் பதிவகத்தில் "தெஹிவலை" எனும் பிரிவில் 55 ஆம் காண டத்தில் 103-104 ஆம் இலக்க ஏடு. | மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தின் சல்பிட்டி கோறளை யின் பல்லேபற்றுவ தெஹிவலை-கல்கிசை மாநகர சபை எல்லைக்குள் ஸ்டேசன் வீதி (தற்பொழுது மேஜர் எல். வீ. குணரத்ன மாவத்தை) எபொத்தரியவத்தை என்னும் பெயருடைய இடத்தில் வீதிக்காக ஒதுக் கப்பட்ட 0ஏ. 0றூ. 19.5பே. விசாலமுடைய எச். எப். பி. விஜேசேகர நிலஅளவீட்டாளரினால் 490 ஆம் இலக்க அளவீட்டின் பிரகாரம் 56J காணித்துண்டின் எல்லைகள் :-<br><br>வடக்கே : லொட் 56C, 56D, 56E ;<br>கிழக்கே : லொட் 57A1;<br>தெற்கே : லொட் 56F, 56G, 56H, 561;<br>மேற்கே : லொட் 56B. | 1. வீ. ஈ. செல்வராஜா பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 1981.01.08 ஆந் திகதிய 64 ஆம் இலக்க அறுதி உறுதி. |

10-720

---

## காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் 2 ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 1 ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 3 ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்கள்) கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2010.10.25 ஆந் திகதி தொடக்கம் 2010.11.08 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு கொழும்பு காணிப்பதிவகத்தில் திறந்துவைக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2010.11.15 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல. : பீஎன் /11/02/11/2010/පිවු/ ஸ.
பதிவாளர் நாயகம் காரியாலயம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் பழுதடைந்த ஏடுகளின் விபரங்கள் | காணியின் விபரங்கள் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள் |
|---|---|---|
| கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு காணிப் பதிவகத்தில் "கிரில்ல" எனும் பிரிவில் 37 ஆம் காண்டத்தில் 217, 218 ஆம் இலக்க ஏடுகளில் | மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் "கிருலப்பனை ரெயில்வே அவனியூ" அமைந்துள்ள 32/1 ஆம் இலக்க 0ஏ. 0றூ. 19.87பே. அளவு பரிமாணம் உள்ள அம்பகஹாவத்தை எனும் பெயருடைய இடத்தின் வீ. எச். எல். சேனரத்ன நிலஅளவீட்டாளரினால் 1952.12.01 ஆந் திகதிய 404 ஆம் இலக்க அளவீட்டின் பிரகாரம் 558E எனும் காணித்துண்டின் எல்லைகள் :-<br><br>வடக்கே : 558 D காணித்துண்டு ;<br>கிழக்கே : 558 G காணித்துண்டு (பாதைக்காக ஒதுக்கப்பட்டது);<br>தெற்கே : 558 F காணித்துண்டு;<br>மேற்கே : 557 இல் A காணித்துண்டு. | 1. ஏ. எப். பி. த டபிள்யூ. திலக்கரத்ன பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 1953.04.22 ஆந் திகதிய 383 ஆம் இலக்க அறுதி உறுதி<br><br>2. ஜே. எஸ். பரணவிதான பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 1955.07.20 ஆந் திகதிய 3711 ஆம் இலக்க ஈட்டு உறுதி.<br><br>3. டீ. பி. என். ரிச்சட்ஸ் பி. நொ. ஆல். சான்றுப்படுத்தப்பட்ட 1954.03.26 ஆந் திகதிய 272 ஆம் இலக்க உடன்படிக்கை உறுதி |
| கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு காணிப் பதிவகத்தில் "கிரில்ல" எனும் பிரிவில் 55 ஆம் காண்டத்தில் 25, 26ஆம் இலக்க ஏடுகளில் | மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் "கிருலப்பனை ரெயில்வே அவனியூ" அமைந்துள்ள 32/1 ஆம் இலக்க 0ஏ. 0றூ. 19.87பே. அளவு பரிமாணம் உள்ள அம்பகஹாவத்தை எனும் பெயருடைய இடத்தின் வீ. எச். எல். சேனரத்ன நிலஅளவீட்டாளரினால் 1952.12.01 ஆந் திகதிய 404 ஆம் இலக்க அளவீட்டின் பிரகாரம் 558E எனும் காணித்துண்டின் எல்லைகள் :-<br><br>வடக்கே : 558 D காணித்துண்டு ;<br>கிழக்கே : 558 G காணித்துண்டு (பாதைக்காக ஒதுக்கப்பட்டது);<br>தெற்கே : 558 F காணித்துண்டு;<br>மேற்கே : 557 இல் A காணித்துண்டு. | 1. வீ. சேனாதிராஜா பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 1954.03.26 ஆந் திகதி 272 ஆம் உடன்டிக்கை உறுதி. |
| கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு காணிப் பதிவகத்தில் "கிரில்ல" எனும் பிரிவில் 37 ஆம் காண்டத்தில் 221, 222 ஆம் இலக்க ஏடுகளில் | மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் "கிருலப்பனை ரெயில்வே அவனியூ" அமைந்துள்ள 32/1 ஆம் இலக்க 0ஏ. 0றூ. 28.37பே. அளவு பரிமாணம் உள்ள அம்பகஹாவத்தை எனும் பெயருடைய இடத்தின் வீ. எச். எல். சேனாரத்ன நிலஅளவீட்டாளரினால் 1952.12.01 ஆந் திகதிய 404 ஆம் இலக்க அளவீட்டின் பிரகாரம் 558G (பாதைக்காக ஒதுக்கப்பட்டது) எனும் காணித்துண்டின் எல்லைகள் :-<br><br>வடக்கே : 558 A காணித்துண்டு ;<br>கிழக்கே : 558 H காணித்துண்டு (எஞ்சிய பகுதி);<br>தெற்கே : ரெயில்வே அவனியூ ;<br>மேற்கே : 558 B தொடக்கம் 558 F. | 1. எச். வீ. ராம் பி. நொ. ஆல். சான்றுப்படுத்தப்பட்ட 1953.03.30 ஆந் திகதிய 417 ஆம் இலக்க அறுதி உறுதி.<br><br>2. எஸ். எஸ். முனசிங்க பி. நொ. ஆல். சான்றுப்படுத்தப்பட்ட 1953.03.24 ஆந் திகதிய 1783 ஆம் இலக்க அறுதி உறுதி.<br><br>3. ஏ. எப். பீ. த டபிள்யூ. திலக்கரத்ன பி. நொ. ஆல். சான்றுப்படுத்தப்பட்ட 1953.04.22 ஆந் திகதிய 383 ஆம் இலக்க அறுதி உறுதி.<br><br>4. ஜே. எஸ். பரணவிதான பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 1953.04.28 ஆந் திகதிய 3112 ஆம் இலக்க அறுதி உறுதி. |
| கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு காணிப் பதிவகத்தில் "கிரில்ல" எனும் பிரிவில் 38 ஆம் காண்டத்தில் 135, 136ஆம் இலக்க ஏடுகளில் | மேல் மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் "கிருலப்பனை ரெயில்வே அவனியூ" அமைந்துள்ள 0ஏ. 0றூ. 28.37பே. அளவு பரிமாணமுள்ள அம்பகஹாவத்தை எனும் பெயருடைய இடத்தின் வீ. எச். எல். சேனரத்ன நிலஅளவீட்டாளரினால் 1952.12.01 ஆந் திகதிய 404 ஆம் இலக்க அளவீட்டின் பிரகாரம் 558G (பாதைக்காக ஒதுக்கப்பட்டது) எனும் காணித்துண்டின் எல்லைகள் :-<br><br>வடக்கே : 558 A காணித்துண்டு ;<br>கிழக்கே : 558 H காணித்துண்டு (எஞ்சிய பகுதி);<br>தெற்கே : ரெயில்வே அவனியூ ;<br>மேற்கே : 558 B தொடக்கம் 558 F. | 1. ஜே. எஸ். பரணவிதான பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 1953.12.12 ஆந் திகதிய 3296 ஆம் இலக்க அறுதி உறுதி.<br><br>2. ஜே. எஸ். பரணவிதான பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 1955.04.26 ஆந் திகதிய 3661ஆம் இலக்க அறுதி உறுதி.<br><br>3. ஜே. எஸ். பரணவிதான பி. நொ. ஆல் சான்றுப்படுத்தப்பட்ட 1955.07.20 ஆந் திகதிய 3711 ஆம் இலக்க ஈட்டு உறுதி. |

10-721

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் பணிப்பாளர் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

தரிந்து வோஷிங் (பிறைவேட்) லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி பின்வரும் தீர்மானம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் பணிப்பாளர் சபையால் 2010.08.30 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"இல. 348, மஹர, கடவத்தை என்னும் முகவரியைச் சேர்ந்த சுமித் விக்ரமாராச்சி கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு சீ. பி. ஆர். ரணசிங்க அத்தாட்சிப்படுத்திய 2005, மே 4 ஆந் திகதி கொண்ட 4326 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 02, யூனியன் பிளேஸ், 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீயின் சார்பில் இல. 330/1A, கிரிமெட்டியாகார, கடவத்தை என்னும் முகவரியைச் சேர்ந்த தரிந்து வோஷிங் (பிறைவேட்) லிமிட்டெட்டால் (சொல்லப்பட்ட சுமித் விக்ரமாராச்சி இதன் ஒரு பங்காளாரும் பணிப்பாளருமாவார்) பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள்கொடுப்பனவுக்குப் பிணைப் பொறுப்பாக ஈடும் அடைமானமும் வைத்துள்ளது ஆதலாலும் சொல்லப்பட்ட தரிந்து வோஷிங் (பிறைவேட்) லிமிட்டெட் மேற்படி முறியினால் பெறப்பட்ட கடன் வசதிகளின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளது ஆதலாலும்,

பதினேழு இலட்சத்து ஐயாயிரத்து நாநூற்று தொண்ணூற்று ஒரு ரூபா இரண்டு சதத்தையும் (ரூ. 17,05,491.02) மேலதிக பற்று வசதியின் நிலுவையிலுள்ள மேற்படி பணத்தொகையின் மீது 29.07.2010 முதல் விற்பனைத் திகதி வரை உடன்பட்டுக் கொள்ளப்பட்டவாறு (தொடர் வட்டி அடிப்படையில்) மேலும் வட்டியையும் சார்புடைய நிதியச் சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் கொழும்பு திரிவங்க அன்ட் சேனநாயக அச்சனியஸைச் சேர்ந்த திரு. திரிவங்க சீ. சேனாநாயக என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, அதிகாரி பற்று வத்தளை பிரதேச சபையின் வெலிசறை உப அலுவலகத்தின் எல்லைகளுக்குட்பட்ட கிரிமெட்டி யாகார கிராமத்தில் அமைந்துள்ளதும் கிரிமெட்டியாகார வீதி, 1907 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் கொஸ்கஹாஓவிட்ட என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரத்ன ஹெட்டியாராச்சி தயாரித்த 1996, நவெம்பர் 20 ஆந் திகதிகொண்ட 148/1996 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு B1 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயித்துக் காட்டப்படும்காணித்துண்டு முழுவதும் அதன் கண் அமைந்துள்ள கட்டிடங்கள். மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு B1 என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : ஜே. ஏ. நிக்கலஸ் என்பரினதும் ஏனையோரினதும் நெல் வயல் ; கிழக்கில் : துண்டு B2 ; தெற்கில் : இப்பொழுது கே. டீ. எஸ். பிரசாத் என்பவருக்குரிய 214/1985 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு E (10 அடி பாதை) ; மேற்கில் : இப்பொழுது கே. டீ. எஸ். பிரசாத் என்பவருக்குரிய 214/1985 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு A என்பன அமைந்துள்ளன. 148/1996 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பதினேழு தசம் ஒன்பது ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றா. 7.95பே.). இது கம்பஹா காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் C 730/43 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

துண்டு E என்பதன் மீதும் அதன் வழியாகவும் வழியுமையுடன் சேர்த்து (10 அடி அகலப் பாதைக்கென ஒதுக்கப்பட்டது).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

10-702

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கம் - 336295 - ஏவா ஹக்குரு ரத்தணசிரி மற்றும் ஏவா ஹக்குரு ஜயரத்ன

18.06.2010 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

"கடன் எடுத்த ஏவா ஹக்குரு ரத்தணசிரி மற்றும் ஏவா ஹக்குரு ஜயரத்ன மற்றும் காணியை ஈடுவைத்த ஏவா ஹக்குரு ஜயரத்ன என்பவர்கள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக காலி பிரசித்த நொத்தாரிசு கே. சி. விஜயநாரயனவின் 10.06.2005 திகதியுடைய முறி இலக்கம் 1094 மற்றும் 13.12.2006 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 1818 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மேற்படி முறி பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 25.05.2010 ஆந் திகதிவரை ரூபா 8,32,113.58 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள்

சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் மேற்படி முறிகள் இலக்கங்கள் 1094 மற்றும் 1818 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 8,32,113.58 பணத்தொகையுடன் 26.05.2010 ஆந் திகதிக்கு முதல் ஏலத்திகதிவரை ரூபா 6,15,900 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 22% வட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது.''

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், பெண்தர வலலாவிட்ட கோரளை மேற்கு கரண்தெனிய மாவட்ட செயலாளர் பகுதி இலக்கம் 41A இப்பண்கந்த கிராம செயலாளர் பகுதி தியபிட்டகலந்த கிராமத்தில் அமைந்துள்ள இகல்பொத்த காணியின் நிலஅளவையாளர் அதிபர் 15.11.1984 ஆந் திகதியுடைய வரைபடம் இல. பி. ஜி. ஏ./ 1928 இல் காண்பிக்கப்பட்ட லொட் 01 எல்லைகள் - வடக்கு : இக்காணியின் லொட் 2 மற்றும் பி. பி. ஜிஏ 1918 இல் லொட் 9 ; கிழக்கு : இக்காணியின் லொட் 2 மற்றும் லொட் 15 ; தெற்கு : இக்காணியின் லொட் 15 மற்றும் கிராம வீதி ; மேற்கு : கிராம வீதி இக்காணியின் விஸ்தீரணம் 0.408 ஹெக்டயார் இக் காணி பலப்பிட்டிய காணி பதிவகத்தில் LDO B 12/204 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

10-767

---

### கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இலக்கம் - 1380010361
கடன் கணக்கு இலக்கம் - 390672 - லங்கா போயிசன் எலக்டோனிக் (பிறை) லிமிட்டெட்

18.06.2010 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

''கடன் எடுத்த கம்பனி சட்டப்படி அமைக்கப்பட்ட களனிய, தலுகம, உணுப்பிட்டிய ரோட், கட்டிடம் இலக்கம் 277 பதிவு விலாசத்தில் அமைந்துள்ள லங்கா போயிசன் எலக்டோனிக் (பிறை) லிமிட்டெட் மற்றும் காணி ஈடுவைத்த நெல்சன் நாகசிங்க கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். எம். சி. பி. ஏரத் 06.07.2007 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 824 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மேற்படி முறி பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 17.05.2010 ஆந் திகதிவரை ரூபா 1,67,65,775.38 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின்படி 18.05.2010 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 1,67,65,775.38 வுடன் மேலும் ரூபா 1,45,92,702.30 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 22% வட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அதிகாரி பத்து சியன கோரளையில் களனிய பிரதேச சபை, தலுகம கிளை, வேவல்துவ கிராமத்தில் அளுத் ரோட் கட்டிடம், இலக்கம் 277 இல் அமைந்துள்ள நிலஅளவையாளர் பி. கால்லகே 12.05.1985 ஆந் திகதி வரையப்பட்ட வரைபட இலக்கம் 103 இல் காண்பிக்கப்பட்ட மாரகாவத்த காணியின் லொட் 3 எல்லைகள் - வடக்கு : தொன் சார்ல்ஸ் பொன்னம்பெரும மற்றவர்களின் மாரகாவத்த காணி ; கிழக்கு : கால்வாய் ; தெற்கு : உணுபிட்டிய-சபுகஸ்கந்த ரோட் ; மேற்கு : லும்பினி லேன். இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 1றூ. 10.85பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 103 படி இக்காணி கொழும்பு மாவட்ட காணிப் பதிவகத்தில் C 605/19 இல் பதிவு செய்யப்பட்டது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

10-769

---

### கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கங்கள் - 275199-275191 மற்றும் 275194 - கே. ஆர். பிரதர்ஸ்

10.07.2008 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

''கடன் எடுத்த/காணியை ஈடுவைத்த கே. ஆர். பிரதர்ஸ் என்ற பெயரில் வியாபாரம் செய்யும் கொஸ்வத்தகெதர ராஜபக்சகே ஜயசேன மற்றும் கொஸ்வத்தகெதர ராஜபக்சகே சுனில் ஆனந்த என்பவர்கள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கம்பஹா பிரசித்த நொத்தாரிசு ஜி. ஏ. சி. பி. கணேபொல 17.07.2000 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்திய முறி இலக்கங்கள் 4487 மற்றும் 4489 மற்றும் 10.01.2002 ஆந் திகதியுடைய முறி இலக்கம்

5590 மூலம் செலுத்த வெண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மேற்படி முறிகள் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 26.02.2008 ஆந் திகதி வரை ரூபா 27,26,202 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின்படி மேற்படி சொல்லப்பட்ட முறிகள் இலக்கங்கள் 4487, 4489 மற்றும் 5590 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 27,26,202 வுடன் 27.02.2008 திகதி முதல் ஏலத் திகதி வரை ரூபா 12,90,000 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றக்கு 20% வட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவு எல்லையில் தாசிய பத்து அலுத்குரு கோரளையில் கல்ஒலுவ கிராமத்தில் அமைந்துள்ள இரியகாகும்புர என்ற காணியின் நிலஅளவையாளர் என். ஏ. வி. பெரேராவின் 10.08.1984 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 95/84 இல் காண்பிக்கப்பட்ட பகுதிபடுத்திய காணித்துண்டான லொட் 2 இக்காணியின் எல்லைகள் - வடக்கு : இக்காணியின் லொட் 1 ; கிழக்கு : எச். என். ஜயவர்தனவின் இக்காணியின் மிகுதி காணித்துண்டு ; தெற்கு : லொட் 3 ; மேற்கு : கொழும்பு - மினுவாங்கொடை பிரதான ரோட் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள் எல்லாம் சேர்த்து. நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் C 672/378 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

10-770

---

### மக்கள் வங்கி - கண்டி கிளை

*1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டம் 29டி இன் பிரகாரம் கீழான தீர்மானம்*

மக்கள் வங்கி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டம் 29டி இன் பிரகாரம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 30.07.2010 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் ஏகமனதாக பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது:-

''சம்பா சுதர்ஷனி விஜேசிங்ஹ (தே. அ. அ. இல. 698242400V) மற்றும் சரத் குமார தூல்வல எனும் தூல்வல விதானலா கெதர சரத் குமார (தே. அ. அ. இல. 573191358V) ஆகியோர் கடப்பாடுடையவர்களாக கண்டி பிரசித்த நொத்தாரிசு ஏ. கே. விஜேரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 20.03.2009 ஆந் திகதிய 6153 ஆம் இலக்க முறி மீதும் 15.07.2009 ஆந் திகதிய 6214 ஆம் இலக்க முறி மீதும் வருமதியான கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளமையாலும் மக்கள் வங்கிக்கு 6153 மற்றும் 6214 ஆம் முறிகளின் மீது பதினெட்டு இலட்சம் ரூபா (ரூ. 18,00,000) ஒரு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து அறுநூற்று அறுபத்து ஆறு ரூபா எழுபது சதம் (ரூ. 1,66,666.70) தற்போது வருமதியாக உள்ளதாலும், அத்துடன் மக்கள் வங்கி பணிப்பாளர் சபையானது 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டம் 29 எல் இன் பிரகாரம் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 6153 மற்றும் 6214 ஆம் இலக்க முறிகளின் மூலம் மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட பதினெட்டு இலட்சம் ரூபா (ரூ. 18,00,000) இற்கு 15.04.2010 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை 24% வருடாந்த வட்டியுடன் ஒரு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து அறுநூற்று அறுபத்து ஆறு ரூபா எழுபது சதம் (ரூ. 1,66,666.70) இற்கு 15.01.2010 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை 26% வருடாந்த வட்டியுடன் பணத்தொகையை விற்பனை நாள்வரை அதன் மீதான வட்டியும் விளம்பரச் செலவுகள் மற்றும்ஏதேனும் இறுப்பனவுகள் இருந்தால் அவற்றைக் கழித் அறவிடுவதற்காக கண்டி உரிமம் பெற்ற ஏலவிற்பனையாளர்களான சொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவர்களால் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், ஹரிஸ்பத்துவ குமுகம்மன சியபத்துவ பஹல தூல்வலயில் அமைந்துள்ள அஸ்செந்து கும்புர அல்லது வத்த எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜீ. ஹீன்கெந்த என்பவரினால் தயாரிக்கப்பட்ட 14.01.2006 ஆந் திகதிய 2808 A ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் லொட் 1 என அடையாளமிடப்பட்டு பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டு (அதே நிலஅளவையாளரினால் 14.05.2003 ஆந் திகதிய 2808 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 2 என உப பிரிவாக காட்டப்பட்டதும்) லொட் 1 இன் எல்லைகள் - வடக்கு : 2808 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் லொட் 1 ; கிழக்கு : அதே காணியின் மிகுதிப் பகுதியும் லொட் 1, லொட் 2 உம் கன்னொருவையிலிருந்து பரிகம நோக்கிச் செல்லும் பாதையும் ; தெற்கு : 2808 ஆம் இலக்க வரைபடத்தின்பிரகாரம் லொட் 3, 4 ; மேற்கு: 2808 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் லொட் 3 உம் லொட் 1 உம். இது இருபது தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20.5பே.) பரப்பளவானது. அத்துடன் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இது கண்டி காணிப் பதிவகத்தில் H778/178 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எம். ஏ. பி. சில்வா,
பிரதேச முகாமையாளர்,
கண்டி.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 17, தலதா வீதி,
கண்டி.

10-777

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கணக்கு இலக்கம் : 1309685801

கடன் கணக்கு இலக்கம் - 196241, 196242 மற்றும் 428172 - எக்கோபக் லங்கா பேப்பர் கொண்வடர்ஸ் என்ற பெயரில் அளிஜா சண்ஜீவ தமிண்த கருணாரத்னவுடன் பங்குதாரர் ஆக வியாபாரம் செய்யும் சிசிலியா பிரான்சஸ் சிராணி கருணாரத்ன முன்பு ஜயகொடி

23.12.2009 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

